செ.வெ.எண்: 30 நாள் 25.03.2021

**கோயம்புத்தூர் மாவட்டம்**

# தேர்தல் நடத்தும் அலுவலர்கள் மற்றும் பிரிவு அலுவலர்களுடன் (NODEL OFFICERS) மாவட்ட தேர்தல் அலுவலர்/மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.எஸ்.நாகராஜன் இ.ஆ.ப., அவர்கள் ஆலோசனை.

கோயம்புத்தூர் மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில், இன்று(25.03.2021) தேர்தல் நடத்தும் அலுவலர்கள் மற்றும் பிரிவு அலுவலர்களுடனான (NODEL OFFICERS) ஆலோசனைக்கூட்டம் மாவட்ட தேர்தல் அலுவலர்/மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.எஸ்.நாகராஜன் இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் மாநகர காவல் ஆணையர் திரு.டேவிட்சன் தேவாசீர்வாதம் இ.கா.ப., மாநகர காவல் கண்காணிப்பாளர் திருஅர.அருளரசு இ.கா.ப., மாவட்ட வருவாய் அலுவலர் திரு.இராமதுரைமுருகன், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையின் கூடுதல் இயக்குநர் திருமதி.கவிதா, தேர்தல் நடத்தும் அலுவலர்கள், பிரிவு அலுவலர்கள்(Nodal Officers) மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

**இக்கூட்டத்தில் மாவட்ட தேர்தல் அலுவலர் /மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் தெரிவித்ததாவது,**

கோயம்புத்தூர் மாவட்டத்தில் உள்ள 10 சட்டமன்ற தொகுதிகளுக்கான தேர்தல் நடத்தும் அலுவலர்கள் மற்றும் தேர்தல் பணிகளை சிறப்பாக மேற்கொள்ளும் வகையில் மாவட்ட வருவாய் அலுவலர் நிலையிலும், துணை ஆட்சியர் நிலையிலுமான அலுவலர்களின் (NODEL OFFICERS) தலைமையில் பல்வேறு பணிகளை பிரித்து குழுஅமைத்து பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. பிரிவு அலுவலர்களின் (NODEL OFFICER) பணிகளை தினசரி அறிக்கையாக மாவட்ட தேர்தல் அலுவலகத்தில் சமர்பிக்க வேண்டும்.

அனைத்து நிலை அலுவலர்களும் விழிப்புடன் பணியாற்றிடவேண்டும். கண்காணிப்புக் குழுக்கள், நிலையான கண்காணிப்பு குழுக்கள், கண்காணிப்பு பணிகளை துரிதப்படுத்திட வேண்டும். முறைகேடகவும், போதிய ஆவணங்கள்

இல்லாமலும் கொண்டுசெல்லும் எவ்வித ரொக்கம், பரிசுப்பொருட்கள் மற்றும் இதரபொருட்கள் எதுவானாலும் உரிய ஆவணங்களின் அடிப்படையில் பறிமுதல் செய்ய வேண்டும்.

தேர்தல் நடத்தும் அலுவலர்கள் சம்பந்தப்பட்ட சட்டமன்ற தொகுதி தலைமையிடத்தில் தங்கியிருந்து பணியாற்றவேண்டும்.

மின்னனு வாக்குப்பதிவு இயந்திரங்கள் வாக்குப்பதிவு நாளுக்கு முன்னதாகவே, வாகன வசதியுடன் அந்தந்த வட்டாரங்களில் தயார் நிலையில் உள்ளதை உதவித்தேர்தல் நடத்தும் அலுவலர்கள் உறுதி செய்திடல் வேண்டும். வாக்குச்சாவடிகளில் தேவையான வசதிகளை வாக்குப்பதிவு நாளுக்கு முன்னதாகவே சம்பந்தப்பட்ட உதவித் தேர்தல் நடத்தும் அலுவலர்கள் உறுதி செய்யவேண்டும்.

கோயம்புத்தூர் மாவட்டத்தில் சட்டமன்ற பொதுத்தேர்தலில் பணியாற்றும் வாக்குச்சாவடி நிலைய அலுவலர்கள் மற்றும் பணியாளர்களுக்கு இரண்டாம் கட்ட பயிற்சி வகுப்புகள் நாளை (26.03.2021) நடைபெற உள்ளது. இந்த பயிற்சி வகுப்புகளில் தவறாது கலந்து கொள்ள வேண்டும்.

இந்த பயிற்சியினை நல்ல முறையில் பயன்படுத்தி வாக்குப்பதிவனை உரிய வழிமுறைகளைப் பின்பற்றி நடத்திட, அனைத்து ஆசிரியர்களும், அரசு ஊழியர்களும் முழு ஒத்துழைப்பு அளிக்கவேண்டும் என **மாவட்ட தேர்தல் அலுவலர்/மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.எஸ்.நாகராஜன் இ.ஆ.ப.,** அவர்கள் தெரிவித்தார்.

**வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், கோயம்புத்தூர்.**